தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை– 600 035. தொலைபேசி எண். 044-29515590

விசாரணை நாள் 05.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் SA 10437-E-2024

திரு ஜான் லோபஸ்	-	மேல்முறையீட்டாளர்
/எதிர்/		
பொதுத் தகவல் அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், சென்னை வடக்கு, புழல் சென்னை - 600 066	-	பொது அதிகார அமைப்பு

******

இறுதி ஆணை

இவ்வழக்கு குறித்த விசாரணை இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று நடைபெற்றபோது, 4 உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு, அவற்றை நிறைவேற்றிவிட்டு அது குறித்த அறிக்கையை 20.08.2026 அன்று சமர்ப்பிக்க வேண்டுமென பொதுத் தகவல் அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து, இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர் / சென்னை வடக்கு புழல் வருவாய் கோட்ட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி எம்.அருள்ஜோதி இவ்வாணையத்தில் 20.08.2026 அன்று ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுகளை நிறைவேற்ற காலஅவகாசம் வழங்க வேண்டுமென எழுத்து மூலமாக கோரியதையடுத்து, ஆணையம் அதை ஏற்று ஒரு வார கால அவகாசம் வழங்கியது.

2) அதனை தொடர்ந்து, மேற்படி பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தில் 22.09.2026 அன்று ஆஜராகி, ஆணையத்தின் 27.07.2026 நாளிட்ட ஆணையின் பத்தி 3(i)-ல் உத்தரவிட்டுள்ளபடி, ஆணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகாதது குறித்து தனது விளக்கத்தை அளித்தார். அதில், 27.07.2026 அன்று மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றில் ஆஜராக சென்றிருந்ததாகவும், ஆகவே தன்னால் அன்றைய விசாரணைக்கு ஆஜராக இயலவில்லையெனவும் தெரிவித்துள்ளார். இந்த விளக்கத்தை ஆணையம் ஏற்கிறது. எனினும், வருங்காலங்களில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நடைபெறும் விசாரணைகளுக்கு பொதுத் தகவல் அலுவலர் என்ற முறையில் அவர் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென இவ்வாணையம் அவரை எச்சரிக்கிறது.

3) பத்தி 3(ii)-ல் உத்தரவிட்டுள்ளபடி, மனுதாரர் 5 இனங்களில் கோரிய தகவல்கள் அவருக்கு 20.08.2026 அன்று அனுப்பப்பட்டதாக தெரிவித்து, அதன் நகலையும், அதற்கான தபால் துறை ரசீதின் நகலையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

4) பத்தி 3(iii)-ல் உத்தரவிட்டுள்ளபடி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் / சென்னை வடக்கு புழல் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் திரு ஆ.முரளி அளித்துள்ள விளக்கத்தில், மனுதாரரின் 07.06.2024 நாளிட்ட 6(1) மனுவிற்கு, 16.08.2024 அன்று பதில் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, அதன் நகலும், மனுதாரர் அதை பெற்றுக் கொண்டு வழங்கிய ஒப்புகை அட்டையின் நகலும் ஆணையத்தில் சமர்பிக்கப்பட்டது. இவ்விளக்கத்தை ஆணையம் ஏற்கிறது.

5) பத்தி 3(iv)-ல் உத்தரவிட்டுள்ளபடி, இவ்வழக்கின் மேல்முறையீட்டு அலுவலர் / வட சென்னை வருவாய் கோட்டாட்சியர் அளித்துள்ள விளக்கத்தில், மனுதாரரின் 07.07.2024 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவிற்கு, 05.08.2024 அன்று பதில் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, அதன் நகலும், அதற்கான தபால் துறை இரசீதின் நகலும் ஆணையத்தில் சமர்பிக்கப்பட்டது. இவ்விளக்கத்தை ஆணையம் ஏற்கிறது.

6) ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், இவ்வாணையத்தின், 27.07.2026 நாளிட்ட விசாரணையின்போது பிறப்பிக்கப்பட்ட 4 உத்தரவுகளும் நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

ஒம்/- (அபய் குமார் சிங்)
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண் SA 10437-E-2024

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
சென்னை வடக்கு, புழல்
சென்னை - 600 066

மேல்முறையீட்டு அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியர்
சென்னை வடக்கு, புழல்
சென்னை - 600 066

திரு ஜான் லோபஸ்,
எண்.16, குபேர முத்துசாமி தெரு,
நங்கநல்லூர், சென்னை - 600 061

Copy to file
CR/PA